# கிஹென்னா அக்கினி

## அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்

### மாற்கு 9:44

1. சதா வதைக்கப்படவும் நித்தியமாய் துன்பப்படவும் நியமிக்கப்பட்ட எரிநரகமாகிய கிஹென்னாவை (Gehenna) உலகத்தோற்றத்திற்கு முன்னே தேவன் ஏற்படுத்தியுள்ளார் என்றும், முற்பிதாவாகிய ஆதாமுடைய பாவத்தின் நினைவாக மனுக்குலம் எல்லாம் இந்த அக்கினியாகிய ஆக்கினிக்குள்ளாகியிருக்கிறது என்றும், ஆனால் 'இடுக்கமான வழியாய்' இயேசுவின் அடிச்சுவட்டை பின்பற்றும் சிறு கூட்டம் மட்டுமே இந்த கொடூரமான நித்திய வேதனையிலிருந்து தப்புவிக்க இயேசுவின் மரணம் ஏற்பாடு செய்கிறது என்றும், மீதியுள்ள அனைத்து திரளான ஜனங்களும் ஆக்கினையடைந்து நித்தியமாய் ஜீவனோடு நரக வேதனையில் அங்கலாய்த்து பாடுபடுவார்கள் என்றும் கூறுகிற கொள்கைகளை பொதுவாக அநேகர் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

2. வேறுசிலர் தேவன் அன்பாகவே இருக்கிறார் என்றும், இந்த அவிக்கமுடியாத அக்கினியும், அழிவில்லாத புழுக்களும் இருப்பது தேவையானது என்றும், அவைகளை அவருடைய அன்பு மேற்கொள்ள முடியவில்லை என்றும் கருதுகிறார்கள். மேலும் ஆதியிலே ஏற்பட்ட தேவ ஞானப்பிசகினாலோ/அல்லது தேவ வல்லமை சற்று குறைந்து விட்டதாலோ, சர்வ வல்லவர் கையளவு மக்களை மட்டும் இரட்சிப்பதைவிட மேலாக மீந்த திரளான ஜனங்களுக்கு எதுவும் அவரால் செய்யமுடியவில்லை என்றும், மற்ற பெருங்கூட்டமான மனுக்குலம் முடிவேயில்லாது சதா வதைக்கப்பட்டு துன்பப்படுவார்கள் என்றும், அங்கே அக்கினி அவியாமலும், புழுக்கள் ஒருபோதும் சாகாமலும் இருக்கும் என்றும் கூறுகிறார்கள்.

3. இவ்வாறு பரிசுத்தவான்களாக தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் மட்டும், பரலோகத்திற்குச் செல்வார்கள் என்றும், மற்றவர்கள் அனைவரும் பரலோகம் செல்லும் சிலாக்கியத்தை இழந்துபோவது மட்டுமல்லாது ஜீவியகாலமெல்லாம் முடிவேயில்லாது நித்தியமாக வதைக்கப்படுவார்கள் என்றும், பலரும் சிறுபிராயத்திலிருந்து போதிக்கப்படுகிறார்கள். சிறு குழந்தைகளின் மனதில் இந்த நரகம் என்பது (வேதத்திற்கு புறம்பாக) வெண்சூடேறிய வெப்பம் மிகுந்த இடம் என வருணித்து சித்திரித்து போதிக்கப்படுகிறது.

4. அனைத்து மனுக்குலமும் கட்டாயம் நித்திய வேதனையை அனுபவிக்க வேண்டும் என விமர்சிக்கப்பட்டும் புரிந்து கொள்ளப்பட்டும் இருக்கிறது. எந்த ஓர் சிருஷ்டியும் தொடர்ந்து நித்திய வேதனையை எவ்வளவுதான் தாங்கமுடியுமோ என்று நாம் ஆச்சரியத்துடன் வியப்படைந்தால், அதற்கு பதிலாக தேவன் அவருடைய சர்வ வல்லமையைப் பயன்படுத்தி நம்மை அந்த வெப்பத்தைத் தாங்கவும், வலியை சகிக்கவும் தக்கதாக்குவார் என்பது அப்படிப்பட்டவர்கள் தரும் விளக்கமாகும்.

## அக்கினிப்புழுக்கள்

5. இவ்வளவு அதிகமான வெப்பத்தை புழுக்கள் எவவிதம் தாங்கிக் கொள்கின்றன? எந்த அளவுக்கு இப்புழுக்கள் கஷ்டப்படுகின்றன? இவைகள் எவ்விதம் ஜனங்களுடைய கொடுமையை அதிகப்படுத்துகின்றன? முதலிய கேள்விகள், அநேகருக்கு பெருமளவில் குழப்பத்தைத் தருகின்றன. ஆனால் இந்தக் கொடூரமான சாத்தானுடைய போதனையில் தொடர்ந்து ஆழ்ந்த சிந்தையுடைய சிலர், புழுக்கள் அக்கினிமயமானது என்றும், வெப்பத்தில் வாழக்கூடியன என்றும், வெப்பத்தை விரும்பக்கூடியவை என்றும், புழுக்கள் ஒருவித மேலுறையை பெற்றிருப்பதால், அவைகள் சேதமடையாது, உலக மனுமக்களை அதிகமாக வேதனையடையும்படி செய்கின்றன என்றும் ஒரு கொள்கையை வகுத்துள்ளனர். இவ்விதம் நமதுபாட வசனம் மனுக்குலமனைத்தும் நிர்ப்பந்தமாக வேதனையை சகிக்க வேண்டும் என்று போதிக்கப்பட்டும் புரிந்து கொள்ளப்பட்டும் இருக்கிறது.

6. இந்த நியாயமற்ற அன்பற்ற கொள்கைகளை அநேகர் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். மகாபோதகரும், நமதாண்டவருமாகிய இயேசுவின் வாயிலிருந்து வந்த இப்பாட வசனத்தை மிகவும் வருந்தக்கூடிய அளவுக்கு போர்கிறிஸ்தவ மண்டலம் தப்பபிப்பிராயப்படுத்தியிருக்கிறது. இவ்விதம் இந்தப் பாட வசனம் பல நூற்றாண்டுகளாக தேவனுடைய ஜனங்களால் தவறுதலாகப் புரிந்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இன்னமும், அநேகர், இதைக்குறித்து மிகவும் தவறான அபிப்பிராயத்தில்தான் இருந்துகொண்டு இருக்கிறார்கள். அவர்களது தவறானக் கருத்து சர்வ வல்லமையுள்ள சிருஷ்டிகரை இரக்கமற்ற ஒருவராகவும், தகப்பனத்துவமற்ற ஒருவராகவும் காண்பிக்கிறது.

7. இப்பாட வசனத்தில் (மாற்கு 9:44) கூறப்பட்ட போதகரின் சொல்லிலிருந்து இப்படிப்பட்ட ஒரு கருத்து முடிவுக்கு வருவதா வல்லமை மிகுந்த அவருக்கு விருப்பம்? அவர், இரக்கம், சாந்தம், அல்லது வெட்கம் போன்ற காரணங்களால் இதனை சரியாக விளக்கிக் கூறாதபடி ஆகிவிட்டாரா? இதுவா தேவனுடைய வார்த்தையின் பொதுவான படிப்பினை? அல்லது தவிர்க்கமுடியாத மகாபெரிய பயங்கர தவறுதல் ஏற்பட்டு விட்டதா? அல்லது வார்த்தையின் உருவகப்படுத்தியிருக்கும் பொருளை அறியாது நேரடியாக அர்த்தப்படுத்தி தவறாக நாம் புரிந்து கொண்டிருக்கிறோமா? ஆம், நாம்தான் அதனை தவறாக அர்த்தப்படுத்தி புரிந்துகொண்டிருக்கிறோம்.

8. சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் பார்த்தால் (2தீமோ2:15) இவ்வாக்கியங்களில் உருவகப்படுத்தப்பட்டிருக்கும் கருத்தையும், சுயத்தோற்றமான சொல்லர்த்தக் கருத்தையும் நாம் தெளிவாகப் பிரித்து அறியமுடியும். இல்லாவிடில் நாம் பெரிதும் குழப்பத்திற்குள்ளாவோம்.

9. மாபோதகராகிய இயேசுவின் சீஷர்களான யாக்கோபும் யோவானும் வானத்திலிருந்து அக்கினி இறங்கி சமாரியா பட்டணத்தை அழிக்க விரும்பினார்கள். ஏனெனில் அந்த ஜனங்கள் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளவில்லை. அப்போது அவர் தமது சீஷர்களைக் கடிந்துகொண்டு, மிகவும் இரக்கமுள்ளவராய், அவர்களைப் பார்த்து சொன்னது, “நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்கள் என்பதை அறியீர்கள் என்று அதட்டி மனுஷக்குமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல இரட்சிக்கிறதற்கே வந்தார் என்றார்” லூக் 9:55,56

10. இதன்மூலம் இந்த இரண்டு தீவிரவாத சீஷர்களைவிட பரமபிதா அன்பின் ஆவியிலும், நீதியிலும் குறைவுபட்டவர் என்பதையா மனுஷக்குமாரன் நமக்கு எடுத்துக்காட்டுகிறார்? அல்ல. உக்கிரத்துடன் முழுமையாய் சமாரியர்களின் இவ்வுலக வாழ்வை ஒன்றுமிராதபடி அழிக்க வேண்டும் என்ற மனநிலையில் சீஷர்கள் இருக்கும்போது, நமது பரமபிதா அவர்களைவிட இன்னும் பன்மடங்கு அதிகமாக பேய்த்தனமாக மனுக்குலமனைத்தையும் நித்திய வேதனையில் ஆழ்த்தும் எண்ணமுடையவராய் இருக்கிறாரா? தேவ வல்லமையைக் கொண்டு நித்தியகாலமாக பூலோகவாசிகளை நிரந்திர, ஓயாது கஷ்டப்பட வைப்பதையா இயேசு இங்கு தெரிவிக்கிறார்? அவர்கள் துர்க்குணத்தில் உருவானவர்கள் என்றும் அவர்கள் தாய், அவர்களை பாவத்தில் கர்ப்பம் தரித்தாள் (சங் 51:5) என்றும் அவருடைய சொந்த வார்த்தைகளே அறிவிக்கும்போது மேற்கண்ட விதமாக தேவன் மனுக்குலத்துடன் செயல்படுவாரா? அதுவும்

தேவன் அழிக்காமலும், செயலற்றும் போகும்படி கட்டாமலும் இருக்கும் சாத்தானானவன் எதிராளியாக இருக்கிற சாதகமற்ற சூழ்நிலையில் இருக்கும் அவருடைய பூலோகவாசிகளை அவ்விதம் வாதிப்பதையா இப்பாட வசனம் போதிக்கிறது. "உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்" யோவா 3:17

## ஷியோல், ஏதீஸ், டாற்றரு

11. நரகம் என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தைக்கு ஆதியாகமம் முதல் மல்கியாவரை பயன்படுத்தப்பட்டிருக்கும் எபிரேயே வார்த்தை **ஷியோல்** (Sheol) என்பதாகும். இந்த வார்த்தை, ஜேம்ஸ் அரசரின் மொழிபெயர்ப்பு – வேதாகம்த்தில் (KJV) பாதாளம், குழி, நரகம் என பலவிதமாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. பல தடவைகளில் குழி மற்றும் பாதாளம் என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. **பாதாளம்** என்பதே இதன் சரியான மொழிபெயர்ப்பாகும்.

12. புதிய ஏற்பாட்டில் இதற்கு இணையான கிரேக்க பதம் ஏதீஸ் (Hades) என்ற வார்த்தையாகும். இதுவும் அதேபோல் பலவிதங்களில் பாதாளம் மற்றும் நரகம் என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதனை பாதாளம் என்றே மொழிபெயர்க்க வேண்டும். எந்த ஒரு நியாயமான மேதையும் இந்த வார்த்தையின் மூல அடிப்படை அர்த்தத்தில் ஜீவன் அல்லது துன்பம் என்ற கருத்து சம்பந்தப்பட்டிருக்கிறது என சிறிதளவும் கருதமாட்டான். வேதாகமம், 'நீ போகிற பாதாளத்திலே (Sheol) செய்கையும், வித்தையும், அறிவும், ஞானமும் இல்லையே' (பிர 9:10) என்று தெளிவாக எடுத்துரைக்கிறது. நல்லோர், தீயோர் அனைவரும் மரணத்தில் பாதாளத்துக்கு (Sheol) போவார்கள். அங்கே உயிர்த்தெழுதல் வரும்வரை அப்படியே உணர்வற்ற நிலையில் இருப்பார்கள்.

13. புதிய ஏற்பாட்டில் டாற்றரு (Tartaroo) என்ற வார்த்தை (வினைச்சொல்) ஒரு தடவை மட்டும் 2 பேதுரு 2:4இல் காணப்படுகிறது. இது, 'நரகத்துக்குத் தள்ளி' என தவறாக மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. 'அடைக்கப்படுதல்' என்று இருக்கவேண்டும். அதாவது விழுந்து போன தூதர்கள் பூலோகமண்டலத்திலே நியாயத் தீர்ப்புக்காக அந்தகார சங்கிலியாலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள் (யூதா 6, எபே 2:2, 6:12) என்ற கருத்தோடு மொழி பெயர்க்க வேண்டும். இது மனுக்குலத்தை எந்தவிதத்திலும் குறிக்காது, விழுந்துபோன தூதர்களைக்குறித்து நிற்கிறது. அப்போஸ்தலர் கூறுகிறபடி தண்டனைக்காக, தேவன் அவைகளை அடைத்து வைத்துள்ளார் (டாற்றரு). அவைகளை மகா நாளின் நியாயத் தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினால் கட்டி அந்தகாரத்தில் அடைத்து வைத்திருக்கிறார்.

## கிஹென்னா

14. ஜேம்ஸ் அரசரின் மொழிபெயர்ப்பில் (KJV) நரகம் என்பதற்கு நான்காவது பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்கப் பதம் கிஹென்னா (Gehenna) என்ற வார்த்தையாகும். இது 12 தடவை புதிய ஏற்பாட்டில் வருவதை காணலாம். (மத் 5:22, 29, 30, 10: 28, 18:9, 23:15,33, மாற்கு 9:43, 45, 47, லூக் 12:5, யாக் 3:6) நமது தலைப்பு பாடவசனம் இதில் ஒன்றோடு சேர்ந்ததாகும்.

15. கிஹென்னா என்ற சொல்லின் சரியான அர்த்தம் என்ன? அதன் பதம் எதைக்குறிக்கிறது? இது உத்தரிக்கும் ஸ்தலத்திற்கு உள்ள பெயரா? அல்லது புராட்டஸ்டன்ட் மதக்கொள்கையின்படி முடிவில்லாத சித்திரவதையான மிகவும் மோசமான இடமா? நாங்கள் கூறும் பதில் இல்லை என்பதாகும். அதன் விளக்கத்தை இங்கு காண்போம்.

## இன்னோம் பள்ளத்தாக்கு

16. கிஹென்னா என்ற கிரேக்க வார்த்தைக்கு ஒத்த எபிரேய வார்த்தை கி–இன்னோம் (Ge-Hinnom). இது இன்னோம் பள்ளத்தாக்கை அர்த்தப்படுத்துகிறது. இந்தப் பள்ளத்தாக்கு திரும்ப திரும்ப வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது. இதனை சொந்தமாகக்கொண்ட குடும்பத்தாரின் பெயரால் இன்னோம் என்று இது பெயரிடப்பட்டது. இது வேதாகமத்தில் முதலாவதாகக் காணப்படுகிற பகுதி யோசுவா 15:8 ஆகும். எருசலேம் நகரத்தை எந்த ஒரு வேதாகம வரைபடத்தில் பார்த்தாலும், இந்த பள்ளத்தாக்கு நகர மதிலின் தெற்கு மற்றும் தென்மேற்கு பக்கத்தில் குறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

17. இப்பொழுது இன்னோம் பள்ளத்தாக்கு மூடப்பட்டு அதன் மேல் பழத்தோட்டம் வளர்ந்துள்ளது. ஆனால் ஆரம்பக்காலத்தில் இது மிகவும் ஆழமான பள்ளத்தாக்காயிருந்தது.

18. மிகவும் வருந்தத்தக்களவில் இஸ்ரவேல் ஜனங்கள் சிலை வணக்கம் செய்த காலகட்டத்தில் இன்னோம் பள்ளத்தாக்கு பலி செலுத்தக்கூடிய ஒரு இடமாக இருந்தது. அது அந்த மார்க்கத்தின் ஒரு புனித இடமாக பயன்படுத்தப்பட்டது. அந்நில தெய்வமான மோளேகு உருவம் செம்பினால் வடிவமைக்கப்பட்டு அங்கு நிறுத்தப்பட்டது. அது எவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ளது என்றால், உருவத்தின் ஒரு பாகம் நாற்காலிபோல் செய்யப்பட்டிருந்தது. அதன்பின் பகுதியிலிருந்து துளையின் தீ எழும்புமாறு அமைக்கப்பட்டிருந்தது. உருவத்தின் தலைபாகம் புகை வெளியே செல்லக்கூடிய குழாயின் மேற்பாகமாக இருக்குமாறு செய்யப்பட்டிருந்தது. உருவத்தின் கைகள் ஏதோ ஏந்திக்கொள்ள நீட்டப்பட்டதைப் போல அமைக்கப்பட்டிருந்தன. அவைகள் பழுக்கக்காய்ச்சி சூடேற்றப்படும். அப்பொழுது மூடபிரம்மையிலுள்ள இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் பிள்ளைகளை பலியாக அதன் சூடேற்றப்பட்ட கைகளில் கொடுப்பார்கள். அங்கே பலியாகின்ற குழந்தைகளின் அழுகைக்குரல் வெளியே போகாதபடி அடங்க, அச்சமயம் மேளதாளம், கொட்டு அடிக்கப்படும் பூரிகை வாத்தியம் வாசிக்கப்படும் ஜனங்களும் கூக்குரலிடுவார்கள்.

19. யோசியா என்ற சிறந்த இராஜா இராஜ்யபாரத்துக்கு வந்த பின்னர், விக்கிரக ஆராதனை அடியோடு ஒழிக்கப்பட்டு மறுபடியும் ஆலயத்தில் ஏகோவா தேவனை சரியாக தொழுது கொள்ளும் பழக்கம் ஆரம்பிக்கப்பட்டது. (2 இராஜா 23:10). அதன்பிறகு மறுபடியும் இந்த கொடிய பழக்கத்தை ஒருபோதும் இஸ்ரவேல் ஜனங்கள் செய்யாதபடிக்கு இன்னோம் பள்ளத்தாக்கு அருவருக்கப்பட்ட ஒன்றாக மாற்றப்பட்டது. இது வெறுக்கப்படத்தக்கதான பள்ளத்தாக்காக மாறியது. எப்படியெனில், எருசலேமின் தேவையற்ற அழுக்குகளை போடும் ஒரு இடமாக பயன்படுத்தப்பட்டது. செத்துப்போன மிருகங்களை அங்கு எறிந்தார்கள். கொடிய குற்றம் புரிந்தவர்களின் மரண தண்டனையை நிறைவேற்றியபின், அவர்கள் உடலை அடக்கம் செய்வதற்குப்பதில் அங்கே போட்டனர். யூதர்கள், உயிர்த்தெழுதலில் நம்பிக்கைக் கொண்டிருந்ததால், மரித்த உடலை அடக்கம் செய்வது வழக்கம். மாறாக உடலை தூரே எறிந்துவிடுவது அன்னாருக்கு உயிர்த்தெழுதல் இல்லை என்பதை தெளிவாக்கவே இப்படி செய்தனர். ஆதலால் எதிர்கால வாழ்வுக்கு நித்திய ஜீவனுக்கு எந்த நம்பிக்கையும் இல்லாத ஒரு கழிவு பொருளாக நிராகரிக்கப்படுதலை இது விளக்குகிறது.

20. அங்கு எறியப்பட்ட செத்தமிருகங்களின் உடல்களையும் குற்றவாளிகளின் உடல்களையும் புழுக்கள் சாப்பிட்டு அழிக்கும். இப்படியாக புழுக்கள் செத்த சரீரங்களை முற்றிலும் அழிப்பதை யாரும் தடுக்கவில்லை. பள்ளத்தாக்கின் அடியில் தீ போடப்பட்டது. அது கீழே எறியப்படும் எரியக்கூடிய பொருட்கள் அனைத்தையும் எரித்துப்போட்டது. அத்துடன் கந்தகமும் சேர்க்கப்படும். அதன் புகை எந்த நோயையும் அழித்து விடும். ஒருவரும் அந்த தீயை அணைக்க விரும்பவில்லை. அவ்விதம் எரிந்துகொண்டிருத்தல் எல்லோராலும் விரும்பப்பட்டதாயிருந்தது. இதுவே நமது கர்த்தராகிய இயேசுவின் முதல் வருகை நாளின் கிஹென்னாவாக இருந்தது.

## கிஹென்னாவும் இரண்டாம் மரணமும்

21. இயேசுவானவர் இரண்டாம் மரணத்தை எடுத்துக்காட்டும் வகையில் கிஹென்னாவை உருவகப்படுத்திக் காட்டுகிறார். அது முழுவதும் மனப்பூர்வமாக பாவம் செய்யும் அனைவருக்கும் உரிய ஒரு பங்காகும். வெளிப்படுத்தின புத்தகத்தில் உள்ள மற்ற அடையா

ளங்களுடன் சம்பந்தப்படுத்திப் பார்க்கும்பொழுது நாம் ஏற்கனவே பார்த்ததுபோல இந்த கிஹென்னாவை இரண்டாம் மரணத்திற்கு அடையாளமாக உருவகப்படுத்தியே இயேசு விளக்குகிறார். (வெளி 20:14. 15, 21:8)

22. அந்த பள்ளத்தாக்கிலே உள்ள புழுக்கள் அழியாத தன்மை வாய்ந்தன அல்ல. மற்ற புழுக்களையும், லார்வாக்களையும் போலவே சாகக்கூடியவை. அங்கே சுடர் விட்டு எரிந்துகொண்டிருந்த தீ (இப்போது ஒன்றும் எரிந்து கொண்டிருக்கவில்லை.) 'அங்கே அவர்கள் புழு சாவாமலும், அக்கினி அவியாமலுமிருக்கும்' என்று அடையாளப் படுத்தப்பட்ட வகுப்பாரின் அழிவு முற்றிலுமாயிருக்கும் என்பதையும், இவ்விதம் அழிந்துபோகும் அழிவிலிருந்து காப்பாற்ற ஒன்றும் இடைப் பட முடியாது என்பதையும் விளக்குகிறது. இது இரண்டாம் மரணத் தைக்குறிக்கிறது.

23. ஆதாமினால் உண்டான மரணம் அதாவது முதல் மரணம் அழிக்கப்பட்டுவிடும் என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது. (1 கொரி 15:26). ஆதாமின் மரண சாபத்தை ஒழிக்கும்படி நியாயமான அதிகா ரத்தை பெற்றுக்கொள்ளவே கிறிஸ்து மரித்தார். மேலும் ஆதாமின் சந்ததியில் யாரெல்லாம் கிறிஸ்துவின் புண்ணியத்தை ஏற்றுக்கொள் ளுகிறார்களோ அவர்கள், ஆதாமில் இழந்துபோய் கல்வாரியில் மீட்கப் பட்ட எல்லாவற்றையும் திரும்பவும் பெற்றுக் கொள்ள தூக்கியெடுக்கப்படுவார்கள். ஆனால் முழுவதும் பிரகாசிக்கப்பட்ட பின் பாவத்தை நேசித்து அதனோடு ஒத்து வாழ்கிற மற்றும் தெய்வசித்தத்திற்கு கீழ்ப்படிய மறுத்தவர்களை இரண்டாம் மரணம் முழுவதுமாக நித்தியமாக அழித்துவிடுகிறது..

24. பூமிக்குரிய எருசலேம், பூமியெங்கும் ஸ்தாபித்தாக வேண்டிய தேவனுடைய இராஜ்ஜியத்துக்கு அதாவது பரலோகத்திலி ருந்து இறங்கும் பரம எருசலேமுக்கு உருவகமாக இருப்பதைப் போல, கிஹென்னா மற்றும் அதன் அக்கினி மற்றும் புழுக்கள் எல்லாம் ஒவ்வொரு மனப்பூர்வ பாவியையும் அழிக்கும் இரண்டாம் மரணத்தை உருவகப்படுத்துகிறது. அதாவது கிறிஸ்துவின் மத்தியஸ்த 1000 வருட ஆட்சியின் காலத்திலும், அதன் முடிவிலும், சொற்பக்காலத்திலும், நீதி முழுவதும் ஸ்தாபிக்கப்பட்ட பூமிக்குரிய இராஜ்ஜியத்தை செம்ம நியாடு போன்ற மனுக்குலத்திற்கு கொடுக்கும்முன்னும், மனப்பூர்வ மாய் பாவம் செய்தவர்கள் இரண்டாம் மரணத்தில் அழிக்கப் படுவார்கள் என்பதை கிஹென்னா விளக்குகிறது.

25. புதிய எருசலேம் சொல்லர்த்தமான நகரத்தை போல் சொல்லர்த்த தங்க தெருக்களும், சொல்லர்த்த முத்துக்களினால் செய்யப்பட்ட வாசல்களும், சொல்லர்த்த கற்களாலான சுவர்களும் கொண்டதாக இல்லாது இருப்பதுபோல, இன்னோம் என்ற பள்ளத் தாக்கும் அல்லது நகரத்தின் வெளியே அக்கினி கடலும் சொல்லர் த்தமாய் இருப்பது இல்லை. இரண்டும் உருவகப்படுத்தப்பட்டவை களே. எருசலேம் தேவனோடு இணங்கி ஒத்து போகிறவர்கள் தெய்வீக ஆசீர்வாதத்தையும் நித்திய ஜீவனையும் பெறுவதைக் குறிக் கிறது.

26. அப்படியே கிஹென்னா தேவனைவிட்டு பிரிகிறவர்கள் நித்திய அழிவு அடைந்து அழிக்கப்பட்டு 'இரண்டாம் மரணத்தை' அடைவதை தெளிவாகக் காட்டுகிறது. அக்கினி ஒருபோதும் பாது காக்கப்படுதலுக்கு அடையாளம் ஆகாது. அதற்கு எதிரிடையாக எப்பொழுதும் அழிவையே குறிக்கும். கந்தகமும் கூட சேர்ப்பது மேலும் அழிவைத் தீவிரப்படுத்தும் தன்மையை விளக்குகிறது. ஏனெ னில் எரிகிற கந்தகத்திற்கும் பயங்கர அழிவை உண்டாக்கும் தன்மை இருந்ததை முற்காலத்திலேயே அறிந்திருந்தனர். இது மானிட வர்க்கத்தை மட்டுமல்ல, பெரிய மிருகங்களையும் சிறுபூச்சிகளையும் நுண்கிருமிகளையும் மற்றும் உயிருள்ள அனைத்து ஜீவராசிகளையும் கொல்லும் தன்மையைப் பெற்றது.

27. ஆதலால் கிஹென்னா என்ற இந்த பதம் இரண்டாம் மரணத்தை அடையாளப்படுத்துகிறது. இந்த இரண்டாம் மரணத்திலி ருந்து ஒருபோதும் உயிர்த்தெழுதல் இல்லை. மறுவாழ்வு இல்லை. பரிசுத்த பவுலும் நித்திய அழிவை அர்த்தப்படுத்துகிறார். பரிசுத்த பேதுருவும் மிருகஜீவன்கள் போலவே அழிந்துபோகிறதைக் குறிப்பிடு கிறார் (2 தெச 1:10, 2 பேது 2:12). இது மிகவும் தெளிவாக வெளி 20:14இல் அக்கினி கடல் எனக் கூறப்பட்டிருக்கிறது. இது இரண்டாம் மரணத்தையே எடுத்துக்காட்டுகிறது

## ஏசாயா 66:24

28. மனப்பூர்வமாய் மீறுகிறவர்களின் அழிவை இன்னோம் (கிஹென்னா) பள்ளத்தாக்கு எடுத்துக்காட்டும் அழிவாகிய அதே விளக்கத்தைத்தான் ஏசாயா தீர்க்கதரிசி இந்த பகுதியில் கூறுகிறார். ஏசாயாவின் நாட்களில் இன்னோம் பள்ளத்தாக்கில் சொல்லர்த்தமான காட்சி எல்லோருக்கும் தெரிந்த ஒன்றே. அதனை உருவகப்படுத்தி பரிசுத்தாவிமூலம் தீர்க்கதரிசிக்கு சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. அதா வது புதிய வானம் புதிய பூமி என்று அடையாளமாகக் கூறப்படும் மனுக்குலத்தின் புதிய ஆவிக்குரிய மற்றும் பூமிக்குரிய அமைப்புகள் மேசியாவின் ஆட்சியில் நிறைவேறுவதை சுட்டிக்காட்டுகிறது. அப்போது தீமை செய்கிறவர்கள் பாதுகாக்கப்படாமல் முற்றிலும் முழுவதுமாக அழிக்கப்படுவார்கள் என்பதையே இங்கு விளக்குகிறது. "அவர்கள் வெளியே போய் எனக்கு விரோதமாய்ப் பாதகஞ்செய்த மனுஷருடைய பிரேதங்களைப் பார்ப்பார்கள். அவர்களுடைய பூச்சி சாகாமலும், அவர்களுடைய அக்கினி அவியாமலும் இருக்கும். அவர் கள் மாம்சமான யாவருக்கும் அரோசிகமாயிருப்பார்கள்." பிணம் என்பது உயிரற்ற இறந்த உடல் ஆகும். உயிருள்ள ஆத்துமாக்கள் வதைத்து துன்பப்படுவதை பார்ப்பார்கள் என்று இது கூறவோ, அதைப்பற்றிய எந்த ஒரு எண்ணத்தையோ இங்கு குறிப்பிடவில்லை. தேவன் மனுமக்கள் வதைக்கப்படுவதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டார். ஆனால் சரியான தீர்ப்பு செய்வார் (ஏரே 19:5, 32:35)

## தப்பறையை அறுத்தெறிவோம்

29. தேவனுடைய எண்ணக்கூடாத சிருஷ்டிகளை மிகவும் வதைக்கப்படும் இடத்தில் தள்ளுவது தேவனுடைய ஏற்பாடு அல்ல. இதை இவ்விதம் அறிந்து உணரும்போது நமக்கு எவ்வளவு மகிழ்ச்சி கொடுக்கிறது. அப்படியே வெளி 5:13இல் வேதம் தெளிவாகக் கூறுகிறது. "வானத்திலும் பூமியிலும், பூமியின் கீழுமிருக்கிற சிருஷ் டிகள் யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றிலடங்கிய வஸ்துக்கள் யாவும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் உண்டாவதாக என்று சொல்லக் கேட்டேன்". நரகத்தில் ஜீவன்கள் வாழ்ந்துகொண்டு வேதனை அடைந்து கொண்டேயிருப்பின் மேற்கண்டபடி அவர்க ளால் ஸ்தோத்திரம் செலுத்தக்கூடுமோ? பூமியில் சமாதானம் இருக்குமோ? லூக் 2:14.

30. வேதாகமமோ அல்லது நமது நிதானிக்கும் அறிவோ பாவத்தின் சம்பளம் நித்திய வேதனை என்ற போதனைக்கு எந்த ஒரு சிறிதளவும் ஆதரவு கொடுக்கவில்லை. இது தெளிவாக நிரூபிக் கப்பட்டிருக்கிறது. அப்படியிருக்க நாம் இங்கு பார்க்கவேண்டிய உண்மை என்னவென்றால், பல்வேறு மதக்கொள்கைகள், அறிக்கை கள், பாட்டுப்புத்தகங்கள் மற்றும் வேத ஆராய்ச்சிகள் மட்டுந்தான் இதற்கு ஆதரவு கொடுக்கின்றன என்பதே. அதிகமதிகமாக சத்திய வெளிச்சம் வரக்கூடிய இந்த நாட்களில் சிந்தனைத் தெளிவு பெருகும் காரணத்தால் இந்த பயங்கரமான இருண்டகால கொள்கை கிறிஸ்த வர்களின் மத்தியில் விரைவாக செத்துக்கொண்டு வருகிறது. எனினும் இது, பொதுவான தேவனுடைய வார்த்தையிலும் சத்தியத்திலும் அவருடைய குணாம்சத்திலும் உள்ள அவர்கள் பக்தி வைராக்கியத் தினால் அல்ல. மேலும் அவர்களுடைய கொடுமையான மதக்கொள் கையாகிய விக்கிரகத்தை அழிக்க மனம் இசைந்தவர்களாய் இருப்பதினாலும் அல்ல. அவர்கள் தனிப்பட்ட முறையில் அதனை வெறுத்து மறுத்தாலும் இன்னமும் அந்த தப்பான கடுங்கொள்கை யைக்குறித்து வெட்கப்படாமல், அதனை சேவித்து வணங்கிக் கொண்டிருக்கிறார்கள். இன்னமும் தங்களது நேரத்தையும், பணத்தை யும் கொண்டு அதற்கு ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதுதான் ஆச்சரியமாயிருக்கிறது.

31. இந்தத்தப்பறையின் பொதுவான செல்வாக்கானது நேர்மை யான மனதுள்ள இவ்வுலகத்தின் கிறிஸ்தவத்தையும் வேதத்தையும் பழிக்கவும், மாய்மாலக்காரர்கள், நாஸ்திகர்கள் போர்கிறிஸ்தவர்கள்

போன்றவர்களை உருவாக்கவும் வழி செய்கிறது. இவ்வாறு பேர்கிறிஸ் தவ சபைகள் இந்த தூஷணத்தை பற்றிக்கொண்டும், தேவ வார்த்தைகள் பெயரளவில் மதிக்கப்பட்டாலுங்கூட உண்மையில் மறுக்கப்பட்டு வருகின்றன. தெய்வபயம் இருந்தாலுங்கூட நடைமுறையில் அது மறுக்கப்படுகிறது. அனலும் குளிருமில்லாத பிரசங்க மேடையிலும் ஆலயத்திலும் பிரசங்கம் செய்யும் சிறப்பு ஆசனத்திலும் இருக்கும், அதிகமறிந்த கிறிஸ்தவர்களே இதற்கு பொறுப்பு ஆவார்கள். அப்படிப்பட்ட அநேகர் மனப்பூர்வமாக சத்தியத்தை விட்டுக்கொடுக்கிறார்கள். தெய்வ குணாம்சத்திற்குபழி உண்டாக்குகிறவர்களாய், இலகுவான சுகபோகம், உலக நிம்மதி, தற்போதைய லாபம் போன்றவைகளுக்காக சத்தியத்தை விட்டுக்கொடுக்கிறார்கள். இதனால் தங்களுக்கே இலச்சையுண்டாக்கி தங்களை வஞ்சிக்கிறார்கள்.

32. தவறான போதனைகளினால் வஞ்சிக்கப்படாதிருந்தால், சத்தியத்தில் ஸ்திரப்பட்டும் ஆசீர்வதிக்கப்பட்டும் இருக்கக்கூடும். அப்பட்டிப்பட்டவர்களாலேயே அந்த தப்பறையான நங்கூரம் அறுத்து கழற்றிவிடப்பட்டுக் கொண்டிருக்கிறது. கிறிஸ்தவர்கள் என்று தங்களை தெரியப்படுத்தியிருக்கிறவர்கள் தங்களுக்குள்ளேயும், தேவனுக்கும் உண்மையாக இருப்பார்களேயாயின் ஏசாயா 29:13 இல் கூறுவதை சீக்கிரம் கற்றுக்கொள்வார்கள். "அவர்கள் எனக்குப் பயப்படுகிற பயம் மனுஷராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது". எல்லாரும், "தேவனே சத்தியபரர் என்றும், எந்த மனுஷனும் பொய்யன் என்றும் சொல்லுவோமாக" ரோமா 3:4 என தீர்மானிப்பார்களேயாயின், மேலும் சமுதாய கோட்பாடுகள் எல்லாம் அபூரணமானது என்றும் தவறாக வழிநடத்துபவைகள் என்றும் எல்லாருக்கும் எடுத்துக்காட்டுவோமாயின், மதக்கோட்பாடுகள் எல்லாம் தகர்ந்து அழியும் பெரிய வேலை சீக்கிரம் நேரிடும். அதன் பிறகு இதுவரை இல்லாத அளவு வேதாகமம் படிக்கப்பட்டு உயர்வாக மதிக்கப்படும். மேலும் பாவத்தின் சம்பளம் மரணம், வேதனையில் நித்தியஜீவனுடன் நித்தியமாய் வாழ்கின்ற வாழ்வு அல்ல என்ற உறுதியான செய்தி ஒரு நீதியான விளைவை போதிக்கிறது என்று அறிந்து ஒப்புக் கொள்ளப்படும்.

*BS 671:11*

1993 ஆம் ஆண்டின்

**குறிக்கோள் வாக்கியம்**

**கர்த்தர்<br>உன் போக்கையும்<br>உன் வரத்தையும்<br>இதுமுதற்கொண்டு<br>என்றைக்குங் காப்பார்.**

**சங்கீதம் 121:8**

**The LORD shall preserve thy going out and thy coming in from this time forth and even for evermore**

*Psalm 121 : 8*

# மன்னா

**என் கன்மலையும், என் கோட்டையும் நீரே; உமது நாமத்தினிமித்தம் எனக்கு வழிகாட்டி, என்னை நடத்தியருளும். சங்கீதம் 31:3**

* கர்த்தர், குறிப்பிட்ட பாடங்களையும் அனுபவங்களையும் நமக்குக் கொடுத்திருக்கிறார்.
* அவைகளில் சில, அமைதலான அமர்ந்த முறையில் நமக்குக் கிடைத்திருக்கின்றன.
* அவைகள், நமக்கு ஏதாவது ஒரு முறையில் அனுகூலமாகவோ அனுகூலமற்றதாகவோ இருக்கின்றன.
* ஏற்கனவே நமக்கு அனுகூலமாகவோ அனுகூலமற்றதாகவோ இருந்த இந்த நிலை முறிந்து போவதற்குரிய நிலைக்கு கர்த்தரின் பரிபாலனம் வழிநடத்துதலாம்.
* அதன்பின் நமக்கு அவைகளைக் கொடுக்கும் முறையில் மாற்றமும் ஏற்படலாம்.
* அந்த வழிநடத்துதல் புதிய சூழலுக்கும் புதிய நிபந்தனைகளுக்குமாயிருக்கலாம்.
* இதைக்குறித்து முறுமுறுத்தலோ, குறை கூறுதலோ, அல்லது மாற்றாக ஒரு தேர்ந்தெடுப்பை தெரிவித்தலோ உண்மையான ஆவிக்குரிய இஸ்ரவேலனுக்கு முறையல்ல.
* ஆனால் அப்படிப்பட்ட நிலையில் கர்த்தரை நோக்கிப் பார்த்தலே தகும்.
* முன்னால் இருந்த நிலையைவிட இது மிகவும் வறண்ட விரும்பப்படத்தக்கதல்லாத வனாந்திர நிலையாய் கூட இருக்கலாம்.
* தேவ பரிபாலனத்தின் வழி நடத்துதலை உணர்ந்தறியக் கூடுமானால் எக்கேள்வியும் கேளாது கர்த்தருடைய வழி நடத்துதலைப் பின்பற்ற வேண்டும்.
* விசுவாசத்தின் நிச்சயத்தின் கீதங்களுடன் அவரது வழி நடத்துதலைப் பின்பற்ற வேண்டும்.
* ஏனெனில் அலைகளுக்கு மேலாக உயர்ந்திருக்கும் கன்மலை, அதன்மேல் புகலிடம் கொண்டோனை புயலிலிருந்து பாதுகாக்கிறது.
* அதைப்போல தேவனே நமது கன்மலையாய் நமது பாதுகாவலராயிருக்கிறார்.
* அவர் நமது கோட்டையாக நமது விரோதிகளின் எதிர்ப்புகளிலிருந்து நம்மை பாதுகாக்கிறார்.
* மேலும் அவர்களின் எதிர்ப்புகளை எதிர்க்கவும், எதிரிகளை அதிக காயப்படுத்துமளவு தாக்கவும் தக்கதாக பலப்படுத்துகிறார்.
* நமது பாதுகாவலர், பலப்படுத்துகிறவர் என்ற முறையில் நம்மை அவருடைய சத்தியத் தண்டைக்கு நடத்தி தமது பரிபாலனத்தினால் நாம் அவரது குணாம்சத்தை பெறும்படி வழி நடத்துகிறார்.
* நம்மை நடத்துபவராக நமது அடிகளை நிர்வகிக்கிறார்.
* நமது வழிகாட்டியாக நாம் அறியாத வழிகளில் நாம் தொடர வேண்டிய மார்க்கத்தைக் காண்பிக்கிறார்.
* அவ்விதம் நம்மை நித்திய இராஜ்ஜியத்திற்கு நடத்துகிறார்.

*FEB 21*